# டிபிகேஎல்லில் வைக்கப்பட்டிருந்த 130 மோட்டார் சைக்கிள்கள் தீயில் அழிந்தன



கோலாலம்பூர், அக். 29-

தலைநகர் தாமான் கொனாவுட்டில் உள்ள மாநகர் மன்றத்தின் (டிபிகேஎல்) கிடங்கில் வைக்கப்பட்டிருந்த 130 மோட்டார் சைக்கிள்கள் தீயில் அழிந்தன.

நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணி அளவில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் மேற்குறிப்பிட்ட 130 மோட்டார் சைக்கிள்களும் 100 விழுக்காடு தீயில் அழிந்ததாக கோலாலம்பூர் தீயணைப்பு - மீட்புப்படையின் நடவடிக்கை மையம் கூறியது.

தொலைபேசி அழைப்பைப் பெற்றதைத் தொடர்ந்து பண்டார் துன் ரசாக், செராஸ் தீயணைப்பு - மீட்புப்படை நிலையங்களில் இருந்து உறுப்பினர்கள் அங்கு விரைந்தனர்.

அவர்கள் தீயை முற்றாக அணைத்தபோது மேற்குறிப்பிட்ட 130 மோட்டார் சைக்கிள்களும் முற்றாக தீயில் அழிந்தன என்று கூறிய அவர், அங்கு தீ மூண்டதற்கான காரணம் குறித்து தாங்கள் விசாரணை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.